# செயலாற்றுகையும் பொறுப்புக்கூறலும் பற்றிய அறிக்கை 2014

## விலை மதிப்புத் திணைக்களம்

நிதி, திட்டமிடல் அமைச்சு

## பாகம் 1 - முகாமைத்துவ ஆராய்ச்சியும் பகுப்பாய்வும்

### முகவுரை

அரசாங்க விலை மதிப்புத் திணைக்களமானது, எமது நாட்டின் தேச மக்களின் சமூக பொருளாதார அபிவிருத்தியை நோக்கிமுக்கிய பங்காற்றுகின்றது. உள்ளூராட்சி மன்றங்களின் எல்லைக்குட்பட்ட சொத்துக்களுக்கு வரிப்பண இலக்கங்களை ஒழுங்கு முறையாக வழங்குவதும் அரசாங்க பொருளாதார முயற்சிகளை மீள வடிவமைப்பதற்காக ஒவ்வொரு காலாண்டுக்கொரு முறை விதிக்கப்படுகின்ற பொருளாதார வரிகளை மதிப்பீடு செய்வதோடு அபிவிருத்தியை நோக்காகக் கொண்ட செயற்திட்டங்களுக்காக கட்டாயக் கொள்வனவு அதிகாரத்தின் கீழ் எடுக்கப்படும் நிலங்களுக்கான நட்ட ஈடுகளை மதிப்பீடு செய்வது வரை எமது திணைக்களத்தின் சேவை விரிவாக்கம் அடைந்துள்ளது.

2014 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையானது குறித்த காலப்பகுதியில் நாட்டின் அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்த அதேவேளை எமது நோக்கு, செயற்பணி, மற்றும் குறுங்கால, நீண்டகால குறிக்கோல்கள் என்பவை அடையப்பெற்றதை பிரதிபலிக்கின்றது. இதற்குச் சான்றாக எமது மனித பௌதீக வளங்களின் பலம் மற்றும் குழுச் செயற்பாட்டுத் தந்திரோபாயமும் இணைந்து 2013 ஆண்டினை விட மிகப் பெரிய முன்னேற்றம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனக்கு நல்கிய ஒத்துழைப்புக்காக இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் அதிமேதகு ஜனாதிபதி அவர்களுக்கும், நிதி அமைச்சரான நிதி தொடர்பான அரசாங்க அமைச்சர் அவர்களுக்கும், கௌரவ உதவி நிதி அமைச்சர் அவர்களுக்கும், திறைசேரியின் செயலாளர் அவர்களுக்கும், நிதி திட்டமிடல் அமைச்சின் அனைத்து ஊழியர்களுக்கும் இத்திணைக்களத்தின் விரிவாக்கத்திற்கு பங்களிப்புச் செய்ததற்காக எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

எமது சேவைகளை வேண்டி நின்ற அரச நிறுவனங்கள். மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் மற்றும் வங்கிகளுக்கும், குறித்த காலப்பகுதியில் எமது திணைக்களத்தின் சேவைகளை சிறப்பாக நிறைவேற்றுவதற்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து ஊழியர்களுக்கும் எனது இதயம் கனிந்த நன்றி உரித்தாகட்டும். எதிர் காலத்திலும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் விலை மதிப்புத் திணைக்களத்தின் வெற்றிக்காக வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஈ.தயாசேன
அரசாங்க பிரதான விலை மதிப்பாளர்
விலை மதிப்புத் திணைக்களம்

## அறிமுகம்

செயலாற்றுகையும் கணக்கீட்டுத்தன்மையும் பற்றிய இந்த அறிக்கையானது அரசாங்க விலைமதிப்புத் திணைக்களத்தினது நிதிசார் முகாமைத்துவ நடவடிக்கைகளின் ஒட்டு மொத்தமான பெறுபேறுகளைப் பிரதிபலிப்பதாக அமைகின்றது. இது திட்டமிடல் நுட்ப முறைகள் தொடக்கம் இலங்கை அரசாங்கத்திற்கும் நிதி திட்டமிடல் அமைச்சுக்குமான திணைக்கள வரவு செலவுத் திட்டத்தினை தயார் செய்தல், அமுல்படுத்தல் மற்றும் நியாயப்படுத்தல் ஆகிய நடவடிக்கைகளினூடாக எமக்கு ஒதுக்கப்பட்ட வளங்களின் பயன்பாடு மற்றும் எமது பணி தொடர்பான செயலாற்றுகையை வெளிப்படுத்தும் அறிக்கையாக விளங்குகின்றது. இவ்வறிக்கை இலங்கை அரசாங்கத்தின் நிதிப்பிரமானக் குறிப்புகளின் தேவைப்பாடுகளுக்கு இசைவாக தயாரிக்கப்பட்டுள்ளதுடன், இது 2014 ஆம் ஆண்டு காலப்பகுதியில் திணைக்களம் மேற்கொண்ட செயற்பாடுகளையும் உள்ளடக்குகின்றது.

**இவ்வறிக்கையைப் பயன்படுத்துவது எவ்வாறு**

இவ்வறிக்கை 2014 ஆம் ஆண்டிற்கான திணைக்களத்தின் செயலாற்றுகை மதிப்பீடுகள், பெறுபேறுகள் மற்றும் கணக்கீட்டுத்தன்மை நடவடிக்கை, மற்றும் எமது நுட்பமுறைகளை அமுல்படுத்தும் போது அதற்காக தயார் செய்யப்பட்டுள்ள எமது வருடாந்த செயலாற்றுகைத் திட்டத்தில் முன்வைக்கப்பட்ட இலக்குகள் மற்றும் குறிக்கோள்களின் உண்மையான பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்ட எமது ஒப்பீட்டு ரீதியான முன்னேற்றம் போன்ற விடயங்கள் பற்றி விபரிக்கின்றது. இவை எமது தந்திரோபாயத் திட்டமிடல் மூலம் விருத்தி செய்யப்பட்டதாகும். இவ்வறிக்கை 06 பிரதான கூறுகளை உள்ளடக்குகின்றது.

- **முகாமைத்துவ ஆராய்ச்சியும் பகுப்பாய்வும் பற்றிய பிரிவு**
  2014 ஆம் ஆண்டு காலப்பகுதியில் காணப்பட்ட எமது வளங்களின் பயன்பாடு மற்றும் எமது பரந்த செயலாற்றுகை ஆகிய விடயங்களை இப்பிரிவு உள்ளடக்குகின்றது. மேலும், இது எமது குறிக்கோள்களை அடைய நாம் உபயோகித்த நுட்பமுறைகள், முகாமைத்துவம் எதிர்கொண்ட சவால்கள் மற்றும் எமது செயலாற்றுகையில் தாக்கத்தை ஏற்படுத்திய வெளிக் காரணிகள் என்பவற்றினையும் உள்ளடக்குகின்றது.

- **செயலாற்றுகைப் பிரிவு**
  2014 ஆம் ஆண்டிற்கான எமது செயலாற்றுகை பற்றிய விபரங்கள் மற்றும் 2013 ஆம் ஆண்டிற்கான செயலாற்றுகைக் குறிக்கோள்களும் இப்பிரிவில் உள்ளடக்கப்பட்டுள்ளன. எமது செயலாற்றுகையினை நாம் மதிப்பிடும் முறைகளும் நாம் அடைந்துள்ள இலக்குகள் மற்றும் அடையாத இலக்குகளுக்கான காரணிகளும் இங்கு விரிவாக ஆராயப்பட்டுள்ளன.

- **நிதிப் பிரிவு**
  2014 ஆம் ஆண்டிற்கான நிதி விடயங்கள், எமது திரண்ட நிதிக் கூற்றுக்கள், குறிப்புகள் மற்றும் இன்னும் தேவையான மேலதிகத் தகவல்கள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

- **பதவியணியும் பலமும்**
  திணைக்களத்தின் மனிதவள ஆற்றல் பற்றிய விரிவான விபரங்கள் இப்பிரிவில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

- **ஆதனச் சந்தை மீளாய்வு**
  இலங்கையின் ஆதனச் சந்தை பற்றிய பிரதான விலைமதிப்பாளரின் கண்ணோட்டம் இப்பிரிவில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**எம்மைப் பற்றி.............**

### எமது நோக்கு

"சமூகப் பொருளாதார அபிவிருத்தியினை மேம்படுத்தும் பொருட்டு ஆதன விலை மதிப்பீடு மற்றும் முகாமைத்துவத்தின் சர்வதேச உயர்தர நியமங்களினூடாக தொழில்சார் நிபுணத்துவத்தைப் பேணுதல்"

### எமது செயற்பணி

"இலங்கை அரசாங்கத்திற்குப் பரந்த தொழில் தேர்ச்சி மிக்க விலை மதிப்பீடு மற்றும் ஆதன முகாமைத்துவ சேவையை வழங்குவதும் வினைத்திறனும் உற்பத்தித் திறனும் மிக்க முகாமைத்துவக் கட்டமைப்பின் மூலம் போட்டித் தன்மையும் செலவுசார் உணர்வுமிக்க திணைக்களமாகச் செயற்படுவதும்"

### எமது முக்கிய பொறுப்புக்கள்

"சட்ட ரீதியான பொறுப்புக்களுக்கு மேலதிகமாக விலை மதிப்புத் திணைக்களம், அரச மற்றும் ஓரளவு அரச நிறுவனங்களுக்குப் பரந்தளவிலான விலை மதிப்பு மற்றும் ஆதன முகாமைத்துவ சேவைகளை வழங்கும் பொறுப்பைக் கொண்டுள்ளது"

### எமது குறிக்கோள்கள்

"பயன் அடிப்படையிலான செயலாற்றுகை இலக்குகளினை நோக்கிச் சிறந்த செயன்முறை நியமங்களைப் பின்பற்றி சேவை பெறுனருக்கு உயர் தொழில் சார் சேவைகளை வழங்குவது இத்திணைக்களத்தின் குறிக்கோளாகும்"

**பிரதான செயற்பாடுகள்**

இத்திணைக்களம் பின்வரும் பிரதான செயற்பாடுகளின் கீழ் வகைப்படுத்தக் கூடிய திணைக்களத்தின் பிரதான தொழிற்பாடுகளான விலைமதிப்பு மற்றும் ஆதன முகாமைத்துவம் ஆகிய விடயங்களில், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் உள்ளிட்ட அரச மற்றும் ஓரளவு அரச நிறுவனங்களுக்கு சேவைகளை வழங்கி வருகின்றது. திணைக்களத்தின் பிரதானமான பணிகள் கீழ்வரும் பிரதான பகுதிகளாக வகுக்கப்பட்டுள்ளது.

(அ) காணி சுவீகரித்தல் சட்டத்தின் 38(அ) பிரிவின் கீழ் பொது நோக்கங்கள் தொடர்பில் கட்டாயமாக சுவீகரிக்கப்படுகின்ற தனியார் காணிகள் பற்றிய நிலைமை அறிக்கைகளைத் தயாரித்து, அதனைத் தொடர்ந்து குறித்த சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அத்தகைய காணிகள் தொடர்பில் நஷ்ட ஈட்டுக் கொடுப்பனவுகளுக்கான விலை மதிப்புகளைத் தயாரித்தல்.

(ஆ) காணி சுவீகரித்தல் சட்டத்தின் கீழ் சுவீகரிக்கப்பட வேண்டிய காணிகள் தொடர்பில், நிதியை ஒதுக்கீடு செய்வதற்காக நஷ்டஈட்டு மதிப்பீடுகளைத் தயாரித்தல்.

(இ) தனியார் ஒப்பந்தத்தின் கீழான கொள்வனவு, கணக்கீடு மற்றும் குத்தகை நோக்கங்களுக்கான மதிப்பீடுகள் அடங்கலாக பல்வேறுபட்ட நோக்கங்கள் தொடர்பில் நிலையான மற்றும் நிலையற்ற ஆதனங்களை மதிப்பிடுதல். பிரதான மதிப்பாளர் தேவைப்படுத்தப்படுகின்ற போதும் சட்ட ஏற்பாடுகளான இலஞ்சம் பற்றிய சட்டம். காணி மறுசீரமைப்பு சட்டத்தின் கீழ் அத்தகைய மதிப்பீடுகளை மேற்கொள்ள தத்துவமளிக்கப்படுகின்ற போதும் விலை மதிப்புகள் மேற்கொள்ளப்படும்.

(ஈ) அரச மற்றும் பிற நிறுவனங்களுக்கு வாடகைக்கு விடுவதற்காக இனங்காணப்பட்ட அவற்றின் ஆதன உடமைகள் தொடர்பில் அல்லது அவற்றின் பாவனை மற்றும் அமைவிட நோக்கத்ததிற்காக அத்தகைய நிறுவனங்களுக்கு தனியார் ஆதனங்களைத் தேவைப்படுத்துகின்ற போது வாடகை பற்றிய மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வழங்கப்படுகின்றன.

(உ) வரிகளை விதிப்பதற்காக (உள்நாட்டு வரிவிதிப்பு தொடர்பில்) கொழும்பு மாநகர சபை எல்லைகளுக்குள் உள்ளடங்கியுள்ள சொத்துக்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து உள்ளூர் அதிகார சபைகளினது அதிகாரத்தினுள் வருகின்ற ஆதனங்களின் மதிப்பீடுகளையும் மீள்மதிப்பீடுகளையும் இத்திணைக்களம் நிறைவேற்றி வருவதுடன், பாதிக்கப்பட்டவரி செலுத்தநர்கள் மூலம் அத்தகைய மதிப்பீடுகள் தொடர்பில் செய்யப்படும் ஆட்சேபனைகளை நிர்ணயிப்பதிலும் உதவுகின்றது.

(ஊ) சொத்து மதிப்பீடுமற்றும் சொத்து முகாமைத்துவம் ஆகிய விடயங்களில் ஆலோசனை சேவைகளை வழங்குதல்.

(எ) நிபுணத்துவம் வாய்ந்த சான்றுகளை வழங்குவதன் ஊடாக சொத்து நஷ்ட ஈடுகளைத் தீர்மானிக்கின்ற மதிப்பிடுகின்ற சட்ட நீதிமன்றங்களுக்கும் பல்வேறுபட்ட பிற நியாய சபைகளுக்கும் இத்திணைக்களம் உதவி வருகின்றது. கொழும்பு மாநகர சபையின் அதிகார பிரதேசத்திலுள்ள சொத்துக்கள் தொடர்பான விடயங்கள் தவிர மேலும் வாடகை சபை பற்றிய கூட்டங்களில் பிரதான மதிப்பீட்டாளருக்கும் இத்திணைக்களத்தின் ஊழியர்கள் உதவி வருகின்றனர்.

(ஏ) திறைசேரியினால் கோரும் பட்சத்தில் பொது முயற்சிகளினது வியாபாரநிலை மதிப்பு நடவடிக்கைகளையும் இத்திணைக்களம் மேற்கொள்கின்றது.

(ஐ) பிரதான மதிப்பீட்டாளரின் அங்கீகாரத்துடன். கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் உள்ள அரச உடமை ஆதனங்களின் வருடாந்த பெறுமானத்தினை மதிப்பிடுகின்றது.

(ஒ) கணக்கீட்டு நோக்கத்திற்காக அரச மற்றும் பகுதியளவில் அரச உடமை உடைய நிறுவனங்களின் சொத்துக்களை மதிப்பீடு செய்தல்.

**சவால்களும் நுட்ப முறைகளும்**

சவால்களும் நுட்ப முறைகளும் பகுதியானது உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான மதிப்பீடு, செயற்றிறன் மதிப்பீடு, நிதி அறிக்கையிடல் என்பவற்றின் வினைத்திறனை மதிப்பீடு செய்தல் என்பவற்றுடன் தொடர்பு படுகின்றது. மேலும் சரியானதும் வினைத்திறன் மிக்கதுமான திட்டத்தை விருத்தி செய்து அதனை அமுல்படுத்தி கண்காணிப்பதனூடாக அதனுடைய பலவீனங்கள், சரியான கணக்கீட்டுத் தன்மையை உறுதி செய்வதோடு அதன் விளைவுகளை அறிக்கையாக வெளிப்படுத்துவதற்கான தொடர்ச்சியான முயற்சிகளும் உள்ளடக்கப்படுகின்றது. 2014 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டுத் தரவுகளின் படி திணைக்களத்தின் செயற்றிறனை ஆய்வு செய்வதன் மூலமும் அத்தரவுகளை வெளிப்படுத்துவதன் மூலமும் மதிப்பீட்டு நடவடிக்கையின் பற்றாக்குறையான தன்மையை அடையாளம் கண்டு கொள்ளவும் அப்பிரச்சினையை தீர்ப்பதற்கான தேவையையும் அடையாளம் கண்டு கொள்ளவும் முடிகின்றது. இதனூடாக உயர் முகாமைத்துவமானது ஆண்டின் வினைத்திறனையும் விளைதிறனையும் மதிப்பிட முடிகின்றது.

நாங்கள் வழங்கும் சேவையானது முகாமைத்துவத்தினுடைய வினைத்திறன் மற்றும் விளைதிறனில் பெருமளவு தங்கியுள்ளது. இது எம்முடைய அடிப்படைக் கருத்துக்கள் மீது மறுகவனம் செலுத்தி எம்மை வழி நடத்துவதனூடாக மிகச் சிறந்த மதிப்பீட்டுத் தந்திரோபாயத்தை விருத்தி செய்து எமது நிறுவனத்தின்இயலுமையை அடையக் கூடியதாக உள்ளது. மேலும் எமது பலம், பலவீனம், வாய்ப்புக்கள் மற்றும் அச்சுறுத்தலை அளவிடுவதற்கு சிறந்த செயற்றிறன் மதிப்பீட்டு முறை இல்லாத சந்தர்ப்பமானது மிக முக்கியமான சவாலாக அமைந்தும் விடுகின்றது.

நிறுவன முகாமை என்ற புதிய கருத்தின் மூலம் எமது செயற்றிறனை விருத்தி செய்து அதனூடாக எமது உள்வாரியான மற்றும் வெளிவாரியான ஆற்றல்கள், சவால்கள், வாய்ப்புக்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் என்பவற்றை மதிப்பிட முடிகின்றது. எமது நடவடிக்கையின் பிரதானமான கவனமானது அவர்களின் பலம் எங்கே உள்ளது என்பதிலும் மிகப்பெரிய வாய்ப்புக்கள் எங்கே இல்லாமல் போகின்றது என்பதிலும் காணப்படுகின்றது. ஓர் திறன்பட்ட அரச நிறுவனமாக சொத்து முகாமைததுவமும் மதிப்பீடும் என்பதில் ஓர் பரந்த சந்தையைப் பெற்று அரசாங்கம் மற்றும் பகுதியளவில் அரச சார்புடைய நிறுவனங்களுக்கு எமது சேவையை வழங்குகின்றோம்.

எமது திணைக்களத்திற்குப் பொருத்தமான பிரதான அதிகாரிகள் கிடைக்கக் கூடியதாக உள்ளமை எமது சொத்தாகக் காணப்படுகின்றது. எமது திணைக்களத்தின் அனைத்து ஊழியர்களும் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானமானி சொத்து முகாமைத்துவமும் மதிப்பீடும் எனும் விசேட பட்டப்படிப்பை பெற்றவர்களாக உள்ளனர். அத்தோடு அனைவரும் தேவையான அறிவு ஆற்றலோடு புதிய திறன்களையும் கொணடவர்களா உள்ளனர். மேலும் எமது திணைக்களமானது மாவட்ட விலை மதிப்பீட்டாளர் மற்றும் உதவி மாவட்ட விலை மதிப்பீட்டாளர் ஆகியோருக்கு அதே பல்கலைக்கழகத்தில் முதுமானி சொத்து முகாமைததுவமும் மதிப்பீடும் பட்டப்படிப்பைத் தொடர்வதற்காக நிதியுதவி வழங்குகின்றது. மேலும் ஒவ்வொரு காலப்பகுதியிலும் திணைக்கள ஊழியர்களின் விலை மதிப்பீடு தொடர்பான அறிவை மேம்படுத்தும் முகமாக சாத்தியமான விரிவாக்கல் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்படுகின்றன.

**பகுதி 11 எமது பணிகள் பற்றிய செயலாற்றுகையும் பகுப்பாய்வும்**

**கல்விசார் முன்னேற்றம்**

**திறன் அபிவிருத்தி நிலையம்**

திறன் அபிவிருத்தி நிலையம், 2006 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டு வாழ்நாள் முழுவதும் கல்வி மேம்பாடு ஊழியரின் பிரதான அடிப்படைகள், கௌரவம் மற்றும் அர்ப்பணிப்பு அத்துடன் ஊக்கம் என்பவற்றினூடாக திறன் அபிவிருத்தியுடன் இணைந்து செயலாற்றுகை மதிப்பீடு மற்றும் வினைத்திறன் என்ற நோக்கில் ***"அறிவு, மனப்பாங்கு மற்றும் வினைத்திறன்"*** கருப்பொருளினை நடாத்தி வருகின்றது.

திறன் அபிவிருத்தி நிலையமானது, உயர் முகாமைத்துவ மட்டம் தொடக்கம் உதவிப்பதவியினர் மட்டம் வரையான திணைக்கள ஊழியர்களின் அறிவு, மனோபாவம் மற்றும் வினைத்திறனை மேம்படுத்துவதன் ஊடாக உன்னத தன்மையினை அடைவதை நோக்காக கொண்டு அதன் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள், செயலமர்வுகள், கருத்தரங்குகள் போன்றவற்றை ஒழுங்கமைத்து நடாத்துகின்றது. வரலாற்றில் முதன் முறையாக திறன் அபிவிருத்தி நிலையத்தால் மக்கள் வங்கி ஊழியர்கள், மாகாண வருமான திணைக்கள ஊழியர்கள், உள்ளூராட்சி மன்ற ஊழியர்கள் போன்றோருக்குப் பரந்தளவில் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டமானது பாரியளவில் வெற்றி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

திறன் அபிவிருத்தி நிலையத்தினால் நடாத்தப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள் இரண்டு பிரதான பகுதிகளுக்குள் அடங்குகின்றன.

- உள்வாரி பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்
- வெளிவாரி பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்

தொடர்புபடுகின்ற துறைகளுக்கமைவாக அவை மேலும் உப பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. திறன் அபிவிருத்தி நிலையத்தினால் நடாத்தப்பட்ட அத்தகைய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் இலகு குறிப்பாக்கலுக்காக பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன.

**அ. உள்ளக பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் (உள்ளக தொழில்சார் மற்றும் முகாமைத்துவ பதவியணிக்கான)**

(அ) பதவி தொடர்பான பயிற்சி நிகழ்சித் திட்டங்கள்
(ஆ) குறித்த விடயம் தொடர்பான நோக்காகக் கொண்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயலமர்வுகள்
(இ) பரீட்சையினை நோக்காகக் கொண்ட பயிற்சி வகுப்புகள் மற்றும் செயலமர்வுகள்
(ஈ) அறிவைப் பகிர்ந்து கொள்ளும் வகுப்புகள்

**ஆ. வெளிவாரி நிகழ்ச்சித் திட்டங்கள்**

(அ) உள்ளூராட்டசி மன்ற ஊழியர்களுக்கான பயிற்சி வகுப்புக்கள்
(ஆ) மாகாண வருமான உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி வகுப்புக்கள் மற்றும் செயலமர்வுகள்
(இ) விஞ்ஞானமானி சொத்து முகாமைத்துவ மதிப்பீட்டு பட்டதாரிகளுக்கான நிகழ்ச்சித்திட்டம்
(ஈ) சுவீகரித்தல் அலுவர்களுக்கான செயலமர்வுகள் மற்றும் பயிற்சி வகுப்புகள்
(உ) குறித்த நோக்கத்திற்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்

**பயிற்சி வசதிகளும் அனுசரணையளிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களும் 2014**

**1. ஏனைய நிறுவனங்களுக்கான குறித்த நோக்கத்திற்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்**

**விஞ்ஞானமானி சொத்து முகாமைத்துவ மதிப்பீட்டு பட்டப் படிப்பு - 111 ஆம் வருட மாணவர்களுக்கான செயன்முறைப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்.**

இது 10 நாட்கள் கொண்ட விளக்க வகுப்புகளுடன் செயன்முறை பயிற்சி வகுப்புக்களையும் உள்ளடக்கியதாகும். இது கட ஆய்வில் ஆரம்பித்து அதனை அறிக்கையாக சமா்ப்பித்தல் வரை உள்ளடக்கியதாகும். 2014 ஆம் ஆண்டில் அறுபத்தைந்து பட்டதாரி மாணவா்களுக்காக இவ்வாறான நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டது.

**11. உள்ளக அலுவலா்களுக்கான உள்ளகப் பயிற்சி**

**மாவட்ட விலை மதிப்பீட்டாளா்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்**

2014 ஆம் ஆண்டில் திணைக்களத்தின் மாவட்ட விலை மதிப்பீட்டாளா்களுக்காக காணி சுவீகரித்தல் மற்றும் அது தொடா்பான விடயங்கள் சம்பந்தமாக நடாத்தப்பட்ட ஒரு நாள் நிகழ்ச்சித் திட்ட அமா்வில் 50 மாவட்ட விலை மதிப்பீட்டாளா்கள் பங்குபற்றினா்

**உதவி மாவட்ட விலை மதிப்பீட்டாளா்களுக்கான செயலமா்வு**

உதவி மாவட்ட விலை மதிப்பீட்டாளா்களுக்காக கோட்பாட்டு ரீதியான அமா்வொன்றை உள்ளடக்கியதாக பலகை விலைமதிப்பீடு தொடா்பான செயலமா்வு நடாத்தப்பட்டது.

**மாவட்ட விலை மதிப்பீட்டாளா்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்**

காணி சுவீகா்த்தல் மீளாய்வுச் சபையின் கீழான வழக்குகளுக்கான ஆவணங்களைத் தயாரித்தல் மற்றும் விலை மதிப்பீட்டுப் பிரிவு, பொதுவான விலைமதிப்பீடு மற்றும் விசேட ஆதனங்களின் விலைமதிப்பீடு தொடா்பாக அடிக்கடி எழும் பிரச்சினைகள் சம்பந்தமான அறிவை மேம்படுத்துவதற்கு அறுபது மாவட்ட விலை மதிப்பீட்டாளா்களுக்காக ஒரு நாள் நிகழ்ச்சித் திட்டம் நடாத்தப்பட்டது.

**ஓய்வூதிய நிதியத்திற்கான பங்களிப்புத் தொகையை கணினிமயப்படுத்தல் தொடா்பான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்**

ஓய்வூதிய நிதியத்திற்கான பங்களிப்புத் தொகையை கணினிமயப்படுத்தல் தொடா்பான அறிவை மேம்படுத்துவதற்கு திணைக்களத்தின் 02 நிருவாக உத்தியோகத்தா்களுக்காக ஒரு நாள் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்

**பிரதான எழுதுவினைஞா்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்**

நிறுவனங்களின் ஒழுக்கங்கள் மற்றும் திணைக்கள ரீதியான கட்டளைகள் மற்றும் சுற்றறிக்கைகள் சம்பந்தமான அறிவை மேம்படுத்துவதற்கு திணைக்களத்தின் 25 அரச முகாமைத்துவ உதவிச் சேவை அலுவலா்களுக்காக ஒரு நாள் நிகழ்ச்சித் திட்டம்.

**விசேட நூலக முகாமைத்துவம் தொடா்பான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்**

திணைக்களத்தின் ஆய்வு மற்றும் அபிவிருத்தி நிலையத்துடன் இணைக்கப்பட்ட உதவி மாவட்ட விலை மதிப்பீட்டாளா்கள் நூலக முகாமைத்து நடைமுறைகள் தொடா்பான ஒரு நாள் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தில் பங்குபற்றினா்.

**கணக்குப் பதிவு தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்**

திணைக்களத்தின் இரண்டு அரச முகாமைத்துவ உதவிச் சேவை அலுவலர்கள் கணக்குப் பதிவு தொடர்பான ஒரு நாள் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தில் பங்குபற்றினர்.

**தமிழ் மொழித் தேர்ச்சி தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்**

திணைக்களத்தின் விலை மதிப்பீட்டுச் சேவை, அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை ஆகியவற்றின் ஆறு அலுவலர்கள் மற்றும் அரச முகாமைத்துவ உதவிச் சேவை அலுவலர்கள் ஆகியோர் தமிழ் மொழித் தேர்ச்சி தொடர்பான பன்னிரண்டு நாள் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தில் பங்குபற்றினர்.

**புதிதாக ஆட்சேர்க்கப்பட்ட பட்டதாரிப் பயிலுநர்களுக்கான புத்தறிவுப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்**

ஒழுங்கமைப்பு ஒழுங்கங்கள், நிருவாக அர்ப்பணிப்புகள், தரவு நிருவாகம் ஆகிய பகுதிகளை எடுத்துக் கூறும் இந்த நிகழ்ச்சித் திட்டம் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் விசேட கருத்திட்டத்தின் கீழ் புதிதாக ஆட்சேர்க்கப்பட்ட பட்டதாரிப் பயிலுநர்களுக்காக நடாத்தப்பட்டது.

## III. பரீட்சையினை நோக்காகக் கொண்ட பயிற்சிகள்

<u>உதவி மாவட்ட விலை மதிப்பீட்டாளர்களுக்கான வினைத்திறன்காண் தடைப் பரீட்சைகளுக்கான பயிற்சி</u>

உதவி மாவட்ட விலை மதிப்பீட்டாளர்களை இலங்கை விலை மதிப்பீட்டுச் சேவை வகுப்பு 11 தரம் 11க்கு தயார்ப்படுத்துவதை நோக்காகக் கொண்டு வினைத்திறன்காண் தடைப்பரீட்சை 1, 11 ற்கு தோற்றுவதற்கு தகைமையுடைய உதவி மாவட்ட விலை மதிப்பீட்டாளர்களுக்கு நிலைமை அறிக்கைகள், வரி மதிப்பீடு, நிர்வாகம், நிதி, மூலதன விலை மதிப்பீடு திணைக்கள ஒழுங்கமைப்பு மற்றும் குறித்த நோக்கத்திற்கான குறித்த சொத்திற்கு மதிப்பீட்டு அறிக்கையைத் தயாரித்தல் போன்ற முக்கிய விடயங்களை உள்ளடக்கியதாக 10 நாட்களைக் கொண்ட நிகழ்ச்சித் திட்டம் நடாத்தப்பட்டது.

<u>உதவி மாவட்ட விலை மதிப்பீட்டாளர்களுக்கான வினைத்திறன்காண் தடைப் பரீட்சைகளுக்கான பயிற்சி</u>

மாவட்ட விலை மதிப்பீட்டாளர்களை இலங்கை விலை மதிப்பீட்டுச் சேவை வகுப்பு 1 தரம் 11க்கு தயார்ப்படுத்துவதை நோக்காகக் கொண்டு வினைத்திறன்காண் தடைப்பரீட்சை 1,11 இற்கு தோற்றுவதற்கு தகைமையுடையவர்களுக்கு காணி சுவீகரிப்புகளுடனான உயர் விலை மதிப்பீடு போன்ற முக்கிய விடயங்களை உள்ளடக்கிய பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் ஒன்று நடாத்தப்பட்டது.

## V. விலை மதிப்பீட்டுச் சேவையிலுள்ள உள்ளக அலுவலர்களுக்கான வெளிவாரி பயிற்சி

<u>சொத்து முகாமைத்துவமும் மதிப்பீடும் முதுமானி பட்டப் படிப்பிற்கான நிகழ்ச்சித்திட்டம்</u>

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் எட்டு உதவி மாவட்ட விலை மதிப்பீட்டாளர்களுக்கு மேற்குறிப்பிட்ட முதுமானி பட்டப்படிப்பினைத் தொடர்வதற்கான நிதி வசதியளிக்கப்பட்டுள்ளது.

<u>புவியியல் தகவல் தொடர்பான குறுகிய கால கற்கைநெறி</u>

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் இரண்டு உதவி மாவட்ட விலை மதிப்பீட்டாளர்களுக்கு மேற்குறிப்பிட்ட குறுகிய கால கற்கைநெறியைத் தொடர்வதற்கான நிதி வசதியளிக்கப்பட்டுள்ளது.

<u>கணக்கீட்டு நியமங்கள் தொடர்பான செயலமர்வு</u>

கணக்கீட்டு நியமங்களின் அடிப்படை எண்ணக் கருக்கள் தொடர்பாக பங்குபற்றுநர்க்குத் தெளிவுபடுத்துவதற்காக நொலேட்ஜ் ஏஜன்ட் (பிரைவட்) லிமிட்டடினால் நடாதத்பப்ட்ட மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சித் திட்டத்தில் பங்குபற்றுவதற்கு மாவட்ட விலை மதிப்பீட்டாளர் ஒருவரும் கணக்காளரும் ஒழுங்குபடுத்தப்பட்டனர்.

**தொழில்நுட்ப ரீதியான முன்னேற்றம்**

விலை மதிப்பீட்டுத் திணைக்களம் அண்மைக் காலத்தில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்துறையில் சிறந்ததொரு முன்னேற்றத்தைக் கண்டுள்ளதுடன், இது உலகலாவியத் தரத்திற்கேற்ப செயற்படுவதோடு ஈ - அரசாங்க கொள்கைகளின் தேவைக்கேற்ப தொழிற் தகைமையைப் பேணக் கூடிய வகையில் அதன் சேவைகளைத் தொடர்கின்றது.

<u>உள்ளக வலைப்பின்னலை (LAN) பராமரித்தல்</u>

பிராந்திய அலுவலகங்களில் உள்ள பத்து உள்ளக வலைப்பின்னல்களையும் தொடர்ச்சியாக மேற்பார்வை செய்து, நிர்வகிப்பதுடன் சகல வன்பொருள்களின் பராமரிப்பும் தகவல் தொழில்நுட்ப ஆளணியினரல்லாத திணைக்களத்தின் தொழில்நுட்பப் பிரிவு அதிகாரிகளால் கையாளப்பட்டு நிறைவேற்றப்படுகின்றது.

திணைக்களத்தின் இணையத்தள அபிவிருத்தி

வினைத்திறன்மிக்க தொடர்பாடலுக்கான மேடையொன்றையும் மற்றும் பொதுத் தகவல்களுக்கான அணுகுகையினையும் உருவாக்கும் முயற்சியுடன் திணைக்களம் இணையத் தளம் ஒன்றை ஆரம்பித்துள்ளது. பொது மக்களுக்கு தமது தேவைகள் குறித்து இலகுவாக இடைத் தொடர்புகளை ஏற்படுத்தக் கூடிய சாத்தியத்தை வழங்குவதன் காரணமாக அது வெளிப்படைத் தன்மையையும் சனநாயகத்தையும் கொண்ட பயன்மிக்க ஒரு கருவியாக இருக்கின்றது. ஈ - அரசாங்க வசதிகளின் கீழ் பொது மக்களுக்கு வழங்கக் கூடிய மற்றுமொரு முக்கியமான ஈ - சேவைகள் ஆரம்ப மட்டத்தில் காணப்படுகின்றன.

<u>கணினிமயப்படுத்திய விலைமதிப்பீட்டு முறை</u>

உத்தேச விலைமதிப்பீட்டு முறைக்கான தொழில்நுட்ப குறித்தொதுக்கள்கள் மற்றும் பாரிய விலைமதிப்பீட்டு முறைக் கருத்திட்டம் என்ற வகையில் பெறுகை நடைமுறைகளை ஆரம்பிப்பதற்குத் தேவையான ஆவணங்களைத் தயாரித்தல் உள்ளிட்ட சகல முன்னெடுப்பு வேலைகளும் டிஜிடல் வடிவத்தில் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு தனித்தன்மை வாய்ந்த தரநிருணய மாதிரியமைப்பை உருவாக்குதல், முறி ஆவணங்களைத் தயாரித்தல் மற்றும் உள்நாட்டு, உலகலாவிய பெறுகை அறிவித்தல்களை வெளியிடுதல் தொடர்பான சகல நிருவாக மற்றும் ஆவணப்படுத்தல் வேலைகள், முறைமையின் தொழில்நுட்ப விலைமதிப்பீடு போன்றவை வருடத்தின் இறுதிப் பகுதியில் நிறைவுசெய்யப்பட்டதுடன் கணினிமயப்படுத்தப்பட்ட கோப்பு முயாமை முறையை ஒரு பாரிய கருத்திட்டமாக ஆரம்பிக்கப்படவிருக்கின்றது.

**பணிகள் பற்றிய செயலாற்றுகையினை அளவிடுதலும் அறிக்கயைிடுதலும்**

## I. காணி சுவீகரிப்புச் சட்டத்தின் கீழான விலை மதிப்பீடுகள்

2014 ஆம் ஆண்டின் போது திணைக்களமானது காணி சுவீகரித்தல் சட்டத்தின் பிரிவு 17(1) இன் நியதிகளுக்கமைய காணி சுவீகரித்தல் தொடர்பாக 16,476 அலகுகள் தொடர்பில் விலைமதிப்புகள் பூர்த்தி செய்யப்பட்டதுடன் காணி சுவீகரிப்புச் சட்டத்தின் 38(ஆ) பிரிவின் கீழ் உடனடியாக செயற்படும் வகையில் அரசாங்கத்திற்குரித்தாக்கப்பட்ட காணிகள் தொடர்பில் 22,877 நிலைமை அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

## II. கட்டாயக் கொள்வனவிற்கான சொத்துக்கள் தொடர்பான மதிப்பீடுகள்

2014 ஆம் அண்டின் போது 1950 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க காணி சுவீகரித்தல் சட்டத்தின் கீழ் காணி பெற்றுக் கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த காணிகள் தொடர்பில் நிதி ஒதுக்கீடு செய்வதற்காக 1,243 மதிப்பீடுகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

## III. இலஞ்ச சட்டத்தின் கீழான விலை மதிப்பீடு

2014 ஆம் ஆண்டின் போது 03 விலை மதிப்பு அறிக்கைகள் இலஞ்ச ஆணையாளரிடம் கையளிக்கப்பட்டன.

## IV. முத்திரைத் தீர்வைக்கான விலை மதிப்பீடு

341 சொத்துக்கள் முத்திரை தீர்வை நோக்கங்களுக்காக விலை மதிப்பீடு செய்யப்பட்டன.

## V. அரச சொத்துக்கள் தொடர்பில் மாதாந்த வாடகைகள் மற்றும் ஏனைய நானாவித குத்தகைகளை நிர்ணயம் செய்தல்

தாபன விதிக்கோவையின் xix அத்தியாயத்தின் பிரிவு 5.1 மற்றும் 7.1 இன் நியதிகளுக்கமைய 4,521 சொத்துக்கள் தொடர்பில் சிக்கன வாடகைகள் மற்றும் தண்டனை வாடகைகள் அறிக்கையிடப்பட்டன.


## VI. வாடகை விலை மதிப்பீடுகள்

2014 ஆம் ஆண்டின் போது, வேறு அரச நிறுவனங்களின் உபயோகத்துக்காக தேவைப்படுத்தப்பட்ட 6,067 சொத்துக்களின் வாடகை விலை மதிப்பீடுகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டது.

திணைக்களத்தின் அலுவலர்கள் நாடளாவிய ரீதியில் 450 வாடகைச் சபைகளுக்காக பிரதான விலை மதிப்பீட்டாளரைப் பிரதிநிதித்துவப்படுத்தியது.

## வருடா வருடம் எதிர்பார்க்கப்பட்டதும் நிறைவுசெய்யப்பட்டதுமான விலை மதிப்புகள்


| விலை மதிப்பு வகைகள் | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 எதிர்வுகூறல் |
|---|---|---|---|---|---|---|
| நிலைமை அறிக்கைகள் | 2343 | 7865 | 6693 | 13818 | 22877 | 30650 |
| காணி சுவீகரித்தல்கள் | 10478 | 8895 | 8366 | 9320 | 16476 | 19500 |
| காணி மதிப்பீடுகள் | 998 | 1171 | 1628 | 1423 | 1243 | 1100 |
| நானாவிதக் காணிகள் | 17782 | 28567 | 29820 | 58563 | 48174 | 63900 |
| இலஞ்ச ஆணையாளர் | 1 | 2 | 11 | 17 | 3 | |
| முத்திரைத் தீர்வை | 167 | 249 | 595 | 472 | 341 | 400 |
| தனியார்த்துறை வாடகைகள் | 4029 | 4872 | 5686 | 6851 | 6067 | 6600 |
| அரசாங்க வாடகைகள் | 6338 | 4577 | 5925 | 5159 | 4521 | 3800 |




* முத்திரைத் தீர்வை இலஞ்ச ஆணையாளரின் விலைமதிப்புகள் காட்டப்படவில்லை

**பொதுவான விலைமதிப்பு –2014 இலக்கு ‹2014அடையப்பெற்றது ›2015 எதிர்வுகூறல்**

| | 2014 இலக்கு | 2014 அடையப்பெற்றது | 2015 எதிர்வுகூறல் |
|---|---|---|---|
| நிலைமை அறிக்கைகள் | 14000 | 22877 | 30650 |
| காணி சுவீகரித்தல்கள் | 10000 | 16476 | 19500 |
| காணி மதிப்பீடுகள் | 2500 | 1243 | 1100 |
| நானாவிதக் காணிகள் | 55000 | 48174 | 63900 |
| தனியார்த்துறை வாடகைகள் | 8000 | 6067 | 6600 |
| அரசாங்க வாடகைகள் | 6000 | 4521 | 3800 |




## IX. வரி மதிப்பீட்டின் பொழிப்பு:

2014 ஆம் ஆண்டு காலப்பகுதியில் "உள்நாட்டு வரிகளை" விதிப்பதற்காக மாநகர சபைகள், நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகளின் அதிகாரத்துக்கு உட்பட்ட அதிகளவான ஆதனங்களின் வரி மதிப்பீடுகளை இத்திணைக்களம் நிறைவு செய்துள்ளது. அத்துடன் இத்திணைக்களம் கீழே காட்டப்பட்டுள்ளவாறு மதிப்பீட்டிற்குப் பின்னரான பணிகளையும் மேற்கொண்டுள்ளது.

**வருடா வருடம் எதிர்பார்க்கப்பட்டதும் நிறைவுசெய்யப்பட்டதுமான மீள் மதிப்பீட்டுப் பணிகள்**


| | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 எதிர்வுகூறல் |
|---|---|---|---|---|---|---|
| பூர்வாங்க அளவை | 263505 | 326933 | 279357 | 243,390 | 184,675 | 290,000 |
| இறுதிப் பரிசோதனை | 181361 | 308480 | 243726 | 203,702 | 180,548 | 290,000 |



**மீள் மதிப்பீடுகள்- 2014 இலக்கு ‹2014 அடையப்பெற்றது › 2015 எதிர்வுகூறல்**


| | 2014 இலக்கு | 2014 அடையப்பெற்றது | 2015 எதிர்வுகூறல் |
|---|---|---|---|
| பூர்வாங்க மீள் மதிப்பீடுகள் | 260,000 | 184,675 | 290,000 |
| இறுதிப் பரிசோதனை | 230,000 | 180,548 | 290,000 |

**மீள் மதிப்பீடுகள்- 2014 இலக்கு, 2014 அடையப்பெற்றது, 2015 எதிர்வுகூறல்**




## வரி மதிப்பீடு சம்பந்தமான பணிகளின் கணக்கு

| | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 எதிர்வுகூறல் |
|---|---|---|---|---|---|---|
| மீள் மதிப்பீடு | 29279 | 33068 | 32596 | 31133 | 26290 | 24000 |
| கட்டடங்களின் மீள் மதிப்பீடுகள் | 2389 | 3171 | 2152 | 1676 | 2227 | 2100 |
| மீள் மதிப்பீடு பற்றிய எதிர்ப்பு | 6248 | 4993 | 9393 | 10665 | 8451 | 8600 |



## வரி மதிப்பீடு சம்பந்தமான பணிகளின்
### 2014 இலக்கு ‹ 2014 அடையப்பெற்றது › 2015 எதிர்வுகூறல்

| | 2014 இலக்கு | 2014 அடையப்பெற்றது | 2015 எதிர்வுகூறல் |
|---|---|---|---|
| காணிகளை மீள் மதிப்பீடுசெய்தல் | 32000 | 26290 | 24000 |
| கட்டடங்களை மீள் மதிப்பீடுசெய்தல் | 3000 | 2227 | 2100 |
| வரி மதிப்பீடு பற்றிய எதிர்ப்பு | 12000 | 8451 | 8600 |




## X. காணி சுவீகரித்தல் மீளாய்வு சபையின் செயற்பாடுகள் பற்றிய சுருக்கமான விபரம்

கட்டாயக் காணி சுவீகரித்தல்களுக்காக வழங்கப்பட்ட நட்டஈடுகளில் திருப்தி அடையாத தரப்புகளினால் சமர்ப்பிக்கப்படும் மேன்முறையீடுகளை விசாரணை செய்யும் பொருட்டு 1950 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க காணி சுவீகரித்தல் சட்டத்ததின் ஏற்பாடுகளின் கீழ் உருவாக்கப்பட்ட "காணி சுவீகரித்தல் மீளாய்வு சபைக்கு" இத்திணைக்களத்தின் சட்டப் பிரிவு உதவி வருகின்றது.

### காணி சுவீகரித்தல் மீளாய்வு சபையின் நிருவாகச் செயற்பாடுகள்


| | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 எதிர்வுகூறல் |
|---|---|---|---|---|---|---|
| ஆரம்ப நிலுவை | 815 | 749 | 1161 | 2088 | 978 | 1490 |
| குறித்த வருடக் காலப்பகுதியில் கிடைக்கப்பெற்றவை | 495 | 401 | 325 | 245 | 429 | 250 |



## காணி சுவீகரித்தல் மீளாய்வு சபையின் நிருவாகச் செயற்பாடுகள்


| | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 எதிர்வுகூறல் |
|---|---|---|---|---|---|---|
| விசாரிக்கப்பட்டவை | 290 | 221 | 297 | 279 | 256 | 236 |
| விசாரணைக்காக பட்டியல் படுத்தப்பட்டவை | 401 | 465 | 435 | 1223 | 1234 | 1763 |
| விசாரணைக்காக பட்டியல் படுத்தப்பட்ட போலும் பூர்த்தியடையாதவை | 111 | 693 | 754 | 831 | 173 | 5 |

## காணி சுவீகரித்தல் மீளாய்வு சபையின் நிருவாகச் செயற்பாடுகள்



## காணி சுவீகரித்தல் மீளாய்வு சபையினால் நடாத்தப்பட்ட மேன்முறையீடுகளின் சுருக்கம்


| | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 எதிர்வுகூறல் |
|---|---|---|---|---|---|---|
| விசாரணையின் பின்னர் பூர்த்திசெய்யப்பட்டவை | 25 | 30 | 143 | 61 | 18 | 50 |
| மீளப்பெறப்பட்ட மேன்முறையீடுகள் | 64 | 69 | 106 | 52 | 52 | 16 |
| தீர்க்கப்பட்ட மேன்முறையீடுகள் | 144 | 67 | 42 | 81 | 114 | 151 |
| நிராகரிக்கப்பட்ட மேன்முறையீடுகள் | 57 | 55 | 96 | 85 | 115 | 117 |



# பகுதி III – நிதிசார் செயலாற்றுகையும் பகுப்பாய்வும்

## நிதிசார் செயலாற்றுகையை அளவிடலும் அறிக்கையிடலும்


| | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 |
|---|---|---|---|---|---|---|
| உண்மையான கட்டணங்கள் | ரூபா.19,179,283 | ரூபா .22,981,498 | ரூபா .32,585,000 | ரூபா .59,347,000 | ரூபா.101,280,582 | ரூபா .119,450,000 |
| அடிப்படையிலான கட்டணங்கள் | ரூபா .247463,213 | ரூபா .25,000,000 | ரூபா .30,000,000 | ரூபா .30,000,000 | ரூபா .30,000,000 | ரூபா . 60,000,000 |



**வருமான உருவாக்கம் – 2014 இலக்கு, 2014 அடையப்பெற்றது, 2015எதிர்வுகூறல்**

| | 2014 இலக்கு | 2014 அடையப்பெற்றது | 2015 எதிர்வுகூறல் |
|---|---|---|---|
| உண்மையான கட்டணங்கள் | ரூபா . 70,000,000 | ரூபா .101,280,582 | ரூபா .119,450,000 |
| அடிப்படையிலான கட்டணங்கள் | ரூபா . 30,000,000 | ரூபா .30,000,000 | ரூபா . 60,000,000 |

**வருமான உருவாக்கம் - 2014 இலக்குஈ 2014 அடையப்பெற்றது , 2015 எதிர்வுகூறல்**



## அரச சொத்துக்களின் மதிப்பீடு


அரச உரிமைச் சட்டத்தின் கீழ் சகல அசையாச் சொத்துக்களையும் மதிப்பீடு செய்வதற்கான பொறுப்பு விலை மதிப்பீட்டு திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த நோக்கத்திற்காக தேவையான மேலதிக ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்ததன் மூலம் அரச சொத்து மதிப்பீட்டு அலகு மூலமாக கூட்டிணைக்கப்பட்டு துரித கருத்திட்டம் ஒன்றாக இது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. 2014 ஆம் அண்டு காலப் பகுதியில் 55 அமைச்சுக்கள் மற்றும் 02 விசேட செலவிடும் அலகுகளின் (தேர்தல் திணைக்களம், பிரதமரின் அலுவலகம்) கீழ் சொத்துக்களை மதிப்பீடு செய்வதற்காக பொறுப்பேற்கப்பட்டு, அவற்றில் 19 அமைச்சுக்களுக்கும் 02 விசேட செலவிடும் அலகுகளுக்கும் சொந்தமான 341 சொத்துக்களின் மதிப்பீடு வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

முழுமையான முன்னேற்றமொன்றாக அரச சொத்துக்களின் விலை மதிப்பீட்டுக் கருத்திட்டத்தை எடுத்து நோக்கும் போது, பூர்த்திசெய்யப்பட்ட பல சொத்துக்களின் கோப்புகள் குறித்து, பின்வருமாறு சமர்ப்பிக்க முடியும்.

| வருடம் | பூர்த்திசெய்யப்பட்ட சதவீதம் | சொத்துக்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2012 | 21% | 1167 |
| 2013 | 47% | 2631 |
| 2014 | 29% | 1595 |

மேலும் திறக்கப்பட்ட மொத்தக் கோப்புகளில் 3% சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 157 கோப்புகள் மூடப்பட்ட மற்றும் ஒன்றுசேர்க்கப்பட்ட வகுதிக்குள் வருகின்றன.

### 2.1.10 முன்னேற்றம் - பூர்த்திசெய்யப்பட்டவற்றின் சதவீதம்



## பகுதி IV பதவியணியும் பலமும்
## பதவியணிக் கணக்கு

இந்த சுருக்கமான கணக்கு திணைக்களத்தின் ஒவ்வொரு பதவியினர் வகுதி தொடர்பிலும் 2014.12.31 இல் உள்ளவாறு திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் பணியாற்றும் உண்மையான எண்ணிக்கை ஆகியவற்றின் விபரங்களைப் பிரதிபலிக்கின்றது.

| பதவி | பதவியணி | பதவியிலுள்ளோர் | வெற்றிடம் | குறிப்பு |
|---|---|---|---|---|
| பிரதான விலை மதிப்பாளர் | 01 | 01 | - | |
| மேலதிக விலை மதிப்பாளர் | 01 | - | 01 | |
| பிரதி விலை மதிப்பாளர்– வகுப்பு I தரம் II | 04 | 04 | - | |
| பணிப்பாளர் நிருவாகம்– இ.நி.சே. வகுப்பு I/I | 01 | - | 01 | |
| பிராந்திய விலை மதிப்பாளர்– வகுப்பு II தரம் I | 15 | 04 | 11 | |
| மாவட்ட விலை மதிப்பாளர்- வகுப்பு II தரம் II | 60 | 40 | 20 | |
| பிரதான கணக்காளர் | 01 | 01 | - | |
| கணக்காளர் (உள்ளகக் கணக்காய்வு) | 01 | 01 | - | |
| சட்ட அலுவலர் | 02 | 02 | - | |
| நிருவாக உத்தியோகத்தர் | 02 | 02 | - | |
| உதவி மாவட்ட விலைமதிப்பாளர் I -வகுப்பு III தரம் I | 360 | 52 | 14 | |
| உதவி மாவட்ட விலைமதிப்பாளர் II - வகுப்பு III தரம் II | | 294 | | |
| வரவுசெலவுத் திட்ட உதவியாளர் | 01 | 01 | - | |
| அபிவிருத்தி உத்தியோகத்தர் | 42 | 23 | 19 | |
| கணினி தரவுப் பதிவு இயக்குநர் | 01 | - | 01 | |
| அ.மு.உ.சே. – I | } 103 | 96 | 07 | |
| அ.மு.உ.சே. – II | | | | |
| அ.மு.உ.சே. – III | | | | |
| அ.ப.உ.- வகுப்பு I | 74 | 67 | 07 | |
| அ.ப.உ.- வகுப்பு II | | | | |
| அ.ப.உ.- வகுப்பு III | | | | |
| சாரதி - வகுப்பு I | } 18 | 13 | 05 | |
| சாரதி - வகுப்பு II A | | | | |
| சாரதி - வகுப்பு II B | | | | |
| சுற்று மாளிகைக் காவலர் | 02 | 02 | - | |
| **மொத்தம்** | 689 | 603 | 86 | |

# பாகம் V ஆதனச் சந்தை பற்றிய மீளாய்வு

## உண்மைச் சொத்துச் சந்தை மீதான பார்வை

நாம் 2015 ஆம் ஆண்டை எதிர்நோக்கும் போது, இலங்கையிலுள்ள உண்மைச் சொத்துக்கள் மற்றுமொரு நிலையான வருடத்திற்கான சமநிலையைத் தோற்றுவிக்கின்றது. இலங்கையின் பொருளாதாரம் உண்மைச் சொத்துக்களை விருத்திசெய்பவர்களுக்கும் முதலீட்டாளர்களுக்கும் சிறப்பானதொரு குறைந்த ஆபத்துச் சூழலை உருவாக்கி நிலையான, மிதமான வளர்ச்சியை தொடர்ந்து வழங்குகின்றது.

நாடுகளின் உண்மைச் சொத்துச் சந்தைகளை வடிவமைப்பதில் பிரதானமான சக்திகளில் ஒன்றாக நகரமயமாக்கல் மாறியுள்ளது. வளர்ந்து வரும் போக்கொன்றாக நோக்கும் போது, நகரமயமாக்கல் இன்று வெறுமனே "புதிய இயல்பாக" காணப்படுகின்றது. மக்கள் தாம் வேண்டிநிற்கும் வேலை மற்றும் வாழ்க்கைப் பாணி ஆகிய இரண்டிற்கும் நெருக்கமாக வாழ்வதற்கு நகர மையங்களுக்கு வெள்ளம் போல் வருகின்றனர். தற்போது கம்பனிகளும் விற்பனையாளர்களும் அவர்களைப் பின்தொடர்வதுடன், இது நகர மையத்திலுள்ள புதிய அலுவலகங்கள் மற்றும் வர்த்தக அபிவிருத்திகளின் பக்கம் இட்டுச் செல்கின்றது. மறுபுறத்தில், வர்த்தக மற்றும் வதிவிட விருத்தியாளர்கள் கலப்புப் பயன்பாட்டு சொத்துக்களைக் கொண்டுவரும் வாய்ப்புக்களை ஆராய்கின்றபடியினால், நகரமயமாக்கல் கைத்தொழில் வழிகளை தெளிவற்றதாக்குகின்றது.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் தமது மூலதனத்தை புதிய கருத்திட்டங்களுக்கு இடுவதற்கே ஆரவமாக இருக்கின்றனர். வங்கிகளின் செயற்பாடுகள் அதிகரித்து வருவதனால் கடன் தொகைகளும் உயர்ந்துகொண்டு வருகின்றது. ஆனால், குறைந்த அறிவுக்கூர்மையின்றி உயர் தர வர்த்தக மற்றும் வதிவிட கருத்திட்டங்களுக்கு கடன்களை வழங்குகின்றனர். ஓய்வூதிய நிதியங்கள் மற்றும் ஏனைய நிறுவனரீதியான முதலீட்டாளர்கள் தமது உண்மைச் சொத்து இருப்புகளை அதிகரிக்க விரும்புகின்றனர். எவ்வாறாயினும் பிரச்சினைகள் காணப்படுகின்ற போதிலும், விசேடமாக ஆர்வமுள்ள ஆனால் அனுபவமற்ற கடன் வழங்குநர்கள் அல்லது முதலீட்டாளர்கள் அனுபவமற்ற விருத்தியாளர்களுக்கு சமமான கருத்திட்டங்களை சந்தைக்குக் கொண்டு வருகின்றனர்.

இலங்கையிலுள்ள பொருளாதாரம் மிதமான வளர்ச்சியை அடைவதன் மூலமும் விருத்திசெய்பவர்களுக்கும் முதலீட்டாளர்களுக்கும் குறைந்த ஆபத்தைக் கொண்ட வியாபாரச் சூழலை உருவாக்குவதன் மூலமும் மொத்தத்தில் நிலையான மட்டத்தில் காணப்படுகின்றது. பணியாளர்களின் பெயர்ச்சி பல தொழில் வழங்குநர்களுக்கான அமைவிடத்தைத் தீர்மானிக்கின்றது. பல சந்தைகளில் அலுவலக நிர்மாணத்திலுள்ள அண்மைக்கால எழுச்சியானது, தேர்ச்சிபெற்ற பணியாளர்களை கவர்வதற்கும் தக்கவைப்பதற்கும் கம்பனிகளின் ஆற்றலுக்கு வசதியளிப்பதன் பக்கம் இட்டுச் செல்கின்றது. நகரமயமாக்கல் நகர மையங்களிலுள்ள அலுவலகங்களுக்கு பாரிய கிராக்கியை உருவாக்குகின்றது. காணிச் சொந்தக்காரர்கள் குறைந்தபட்சம் அண்மையில், இந்த இடங்களை மேம்படுத்தவதற்கு அல்லது மீள்நிலைப்படுத்துவதற்கு விரும்புவதனால், இது நகர மையங்களில் தற்போதுள்ள அலுவலகங்களில் காணப்படும் அதிகரித்த வெற்றிடங்களுக்கு பெறுபேறாக அமைகின்றது. அதிகளவிலான குடியிருப்பாளர்கள் நகர மையங்களுக்கு செல்வதால் சுற்றுப்புற அலுவலக இடங்களிலும் வெற்றிடங்கள் மீது மேலும் அழுத்தங்களைச் செலுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது. நகர மையங்களுக்கான பெயர்வு அதிகமாகக் காணப்படுகின்ற அதேவேளையில், சுற்றுப்புறங்களில் சரியான அமைவிடத்தைத் தெரிவுசெய்வதும் முக்கியமானதாகும்.

எனவே, உண்மைச் சொத்துச் சந்தையிலுள்ள நிறுவனங்கள், வினைத் திறன்மிக்க பொருட்பதிவேடுகளுக்கும் அதேபோன்று உண்மைச் சொத்துக்களுக்காக அதிகரித்துவரும் மூலதனத்திலும் ஈடுபடுத்தவதற்காக மாறிவரும் தமது உண்மைச் சொத்துக்களின் பக்கம் மேல்நிலை நிறைவேற்றத்துடன் இலங்கைக் கூட்டுத்தாபனங்கள், அரசாங்க முகவர்கள் மற்றும் சேவைநாடிகளுக்கும் வழங்குவதற்கு உலகலாவிய பல்நாட்டு உறவுகளுக்கும் மூலதன வளங்களுக்கமான அதன் அணுகுகையுடன் உள்நாட்டுச் சந்தை அறிவை இணைப்பதனை நோக்காகக் கொள்ளுதல் வேண்டும் என்பது முக்கியமானதாகும்.

ஈ.தயாசேன
அரசாங்க பிரதான விலை மதிப்பாளர்
விலை மதிப்புத் திணைக்களம்